## திருவொற்றியூர் வேட்பாளர் எல்.சுந்தர்ராஜனுக்கு வாக்களிப்பீர்!

# சங்கிக் கூட்டத்தைத் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடக்கூடாது! அடிமைக் கூட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள், குறிப்பாக சென்னையில் தலையெடுக்க விடக்கூடாது!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சார முழக்கம்!

**சென்னை, ஏப்.22-**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும் - தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.4.2026) திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சுந்தர்ராஜன் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**



அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:-

இவ்வளவு சிறப்பான, எழுச்சியான, அன்பான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 20 நாட்களில் கிட்டத்தட்ட 120 சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று, அங்கிருக்கக்கூடிய தொகுதி மக்களை எல்லாம் சந்தித்து, நம் வெற்றி வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு நம் கூட்டணிச் சின்னங்களிலும் வாக்கு கேட்டுவிட்டு, இன்று திருவொற்றியூருக்கு வருகை தந்து உங்களை எல்லாம் சந்தித்து, நம் தோழர் சுந்தர்ராஜ் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்வதற்காக வந்திருக்கிறேன்.

நான் கிட்டத்தட்ட 120 தொகுதிகளுக்கு நேரடியாகச் சென்று வந்திருக்கிறேன். எங்குச் சென்றாலும் மிகப்பெரிய எழுச்சி, மிகப்பெரிய வரவேற்பு இருக்கிறது. 100% நம் திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சி அமைக்கப்போவது உறுதி. 100% நம் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் ஆகப்போவது உறுதி. அதற்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக இங்கே திருவொற்றியூரில் தோழர் சுந்தர்ராஜ் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திருவொற்றியூர் தொகுதியில் நம் வெற்றி வேட்பாளர் தோழர் சுந்தர்ராஜ் அவர்களை உங்களிடத்தில் தலைவர் அவர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் நம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் கலைஞருக்கும் மிகப்பெரிய நெருங்கிய தொடர்பு உண்டு. "நான் பெரியாரை மட்டும் சந்திக்காமல் இருந்திருந்தால் நானும் கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன், கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்திருப்பேன்" என்று கலைஞர் அவர்கள் பல முறை பெருமையாகக் குறிப்பிடுவார்கள்.

அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சியின், நம் கூட்டணிக் கட்சியின் வேட்பாளர் தோழர் சுந்தர்ராஜ் அவர்களுக்குத் தான் அரிவாள் சுத்தியல் நட்சத்திர சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் உரிமையோடு கேட்க வந்திருக்கிறேன்.

### தொழிலாளர் தோழர்!

ஒரு தொழிலாளியாகத் தன் வாழ்க்கையைத் தொடங்கியவர். ஏழை எளிய மக்களுடைய நண்பர். தோழர். இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழிலாளர்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் தெரிந்தவர். அவர்களுடைய உரிமைகளுக்காகத் தினமும் குரல் கொடுக்கக்கூடியவர். ஏதோ தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் உங்களை வந்து சந்திக்கக்கூடியவர் கிடையாது தோழர் சுந்தர்ராஜ் அவர்கள். மக்களோடு இருக்கக்கூடியவர். உங்களின் பிரச்சினைகளை அறிந்தவர். அதைத் தீர்க்கக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்.

அதனால்தான் நீங்கள் அனைவரும் அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் அவரை வெற்றிபெற வைக்க வேண்டும்.

ஏற்கனவே சென்ற சட்டமன்றத் தேர்தலில் நம் சகோதரர் கே.பி.சங்கர் அவர்களை வெற்றிபெற வைத்து நீங்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பினீர்கள். இந்த முறை நம் கூட்டணிக் கட்சிக்கு அந்த வாய்ப்பைத் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். உங்களையெல்லாம் உரிமையோடு வந்து ஏன் வாக்கு கேட்கிறேன் என்றால், இந்த ஐந்து ஆண்டுகளில் நம் திராவிட மாடல் அரசு இந்தத் தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறது.

உதாரணத்துக்குச் சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எண்ணூர் நெட்டுக்குப்பம் கொசஸ்தலை ஆறு மற்றும் முகத்துவாரம் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆழப்படுத்தப்பட்டு, தூண்டில் வளைவு அமைக்கப்பட்டிருக்கிறது என்றால் அது நம் முதலமைச்சர் திராவிட மாடல் அரசின் திட்டம்.

25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விம்கோ நகரில் ரயில்வே சுரங்கப்பாதை கட்டுகின்ற பணி நடைபெற்று வருகிறது. இதைச் செய்து கொடுத்தது நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர்.

25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அண்ணாமலை நகர் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கின்ற பணி. 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைக்கின்ற பணி.

20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெட்டுக்குப்பம், தாழங்குப்பம் கடற்கரையில் மீன் இறங்குதளம், வலை பின்னும் கூடம், மீன் காய வைக்கின்ற இடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம்.

சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு கலைக் கல்லூரி மேம்பாட்டுப் பணி. 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கின்ற பணி. பாரதியார் நகரில் மீன்பிடி இறங்குதளம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணலி ஏரிப் படகு குளம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கத்திவாக்கத்தில் நவீன மீன் சந்தை மற்றும் திருமண மண்டபம்.

திருவொற்றியூர் மீன் சந்தை வளாகம். 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணலி அம்பேத்கர் தெருவில் ஒரு திருமண மண்டபம். 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கத்திவாக்கத்தில் ஒரு புதிய பேருந்து நிலையம்.

5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் ஒரு சமுதாய நலக் கூடம். இவ்வளவு திட்டங்களையும் செய்து கொடுத்திருக்கிறோம். மீண்டும் நம் வெற்றி வேட்பாளருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள். மீண்டும் இந்தத் தொகுதிக்கு இன்னும் பல்வேறு திட்டங்களை நிச்சயம் எடுத்து வருவோம் என்கிற வாக்குறுதியைக் கொடுக்க நான் வந்திருக்கிறேன்.

### நிறைவேற்றிய வாக்குறுதிகள்!

நாம் இந்தத் தொகுதிக்கு மட்டும் இவ்வளவு திட்டங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுக்கு நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வாக்குறுதிகள் கொடுத்து, அந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்.

உதாரணத்துக்கு ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். ஒவ்வொரு மகளிரும் கிட்டத்தட்ட மாதம் குறைந்தது 900 ரூபாய் வரை சேமித்திருக்கிறார்கள்.

அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகள் காலையில் பசியோடு படிக்கக்கூடாது என்று முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்.

பள்ளிக்கூடத்தில் படிக்கின்ற குழந்தைகள் கல்லூரி சென்று படிக்க வேண்டும் என்று அவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை. இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம்.

சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன்பு 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தை அறிவித்து, ஒரே மாதத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து முடித்தார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து வருகிறார்கள். அந்தத் திட்டத்தை நிறுத்துவதற்கு அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் முயற்சி செய்தார்கள்.

தேர்தலைக் காரணம் காட்டி உரிமைத் தொகைத் திட்டத்தை நிறுத்துவதற்கு நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ஆனால் நம் தலைவர் என்ன செய்தார்? பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதங்களுக்கும் சேர்த்து 3,000 ரூபாய், கோடைகால சிறப்பு நிதி 2,000 ரூபாய் என்று மொத்தம் 5,000 ரூபாய் வங்கிப் பரிமாற்றம் செய்தார் நம் முதலமைச்சர் அவர்கள். ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் முதலமைச்சர் கொடுத்தார்.

இப்பொழுது வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடனேயே மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் இல்லை. அதை உயர்த்தி 2000 ரூபாய் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறது.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

கல்வி ஊக்கத்தொகையை 1,500 ரூபாயாக உயர்த்தி கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்துக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் 35 லட்சம் மடிக்கணினிகள் இலவசமாக வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

ஆட்சி அமைந்தவுடன் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிர் கைகளிலும் 8,000 ரூபாயை ஒப்படைத்துவிடுவார்கள். வீட்டுக்கு என்ன மின்சாதனப் பொருட்கள் தேவை என்பதை மகளிர் அவர்களே முடிவு செய்து வாங்கிக்கொள்ளட்டும் என்கிற ஒரு நல்ல வாக்குறுதியை நம் தலைவர் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த வாக்குறுதி எல்லாம் நிறைவேற வேண்டும் என்றால், வரும் சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் திருவொற்றியூர் என்றைக்குமே தி.மு.க-வின் கோட்டை என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மீண்டும் நம் தலைவர் சொல்வது போல் இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணி vs தமிழ்நாடு அணி. வெற்றிபெறப்போவது டெல்லி அணியா, தமிழ்நாடு அணியா? டெல்லி அணியைத் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும். தமிழ்நாடு அணியான நாம் வெற்றிபெறுக் காட்ட வேண்டும்.

நான் இவ்வளவு திட்டங்கள் சொன்னேன் அல்லவா, இவ்வளவு செய்திருக்கிறோம் என்று சொல்கிறேன் அல்லவா. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இவ்வளவு செய்வோம் என்று சொல்கிறேன் அல்லவா, ஒன்றை மட்டும் யோசித்துப் பாருங்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க அரசு எந்த விதத்திலாவது தமிழ்நாட்டுக்கு உதவி செய்திருக்கிறார்களா? தமிழ்நாட்டுக்கு ஏதாவது திட்டங்களைக் கொடுக்கிறார்களா? நாம் கேட்கின்ற நிதியைக் கொடுக்கிறார்களா? எந்த உதவியும் கிடையாது.

இன்று தேர்தல் அறிவித்தவுடன் மோடி அவர்களும் அமித்ஷா அவர்களும் மாறி மாறித் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டங்களும் அவர்கள் கொடுப்பது கிடையாது. சென்ற ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டமும் கிடையாது. "தமிழ்நாடு" என்கிற பெயரே அதில் கிடையாது. இப்படித் தொடர்ந்து தமிழ்நாட்டைப் புறக்கணிக்கக்கூடிய மோடி அரசை, ஒன்றிய பா.ஜ.க அரசைப் பழிவாங்க வேண்டிய நேரம். தீர்த்துக்கட்ட வேண்டிய நேரம். அவர்களுக்குச் சரியான விடையைக் கொடுக்க வேண்டிய நேரம்தான் வரும் சட்டமன்றத் தேர்தல்.

இந்த வெற்றி மிக மிக முக்கியமான வெற்றியாக இருக்க வேண்டும். 23-ஆம் தேதி தேர்தல். இன்று தேதி 20. இன்னும் இரண்டு நாட்கள் நம் கைகளில் இருக்கின்றன. நம் தோழர் சுந்தர்ராஜ் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நீங்கள் முடிவெடுத்துவிட்டீர்கள்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் ஒன்றுதான். அடுத்த இரண்டு நாட்கள் நீங்கள் ஒவ்வொருவரும் பிரச்சாரம் செய்யுங்கள். உங்களின் தெருவில், உங்களின் வீடுகளில், உங்கள் பகுதியில் இருக்கக்கூடிய யாரைப் பார்த்தாலும் பிரச்சாரம் செய்யுங்கள். ஏன் நம் சுந்தர்ராஜ் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும்? கம்யூனிஸ்ட் வேட்பாளர் சுந்தர்ராஜ் அவர்களை ஏன் வெற்றிபெற வைக்க வேண்டும்? நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி ஏன் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும்? நம் தலைவர் ஏன் ஆட்சிக்கு வர வேண்டும்?

சாதனைகளைச் சொல்லுங்கள். ஐந்து ஆண்டுகள் நம் தலைவர் என்னென்ன திட்டங்கள் கொடுத்திருக்கிறார். வாக்குறுதிகளைச் சொல்லுங்கள். மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்னவெல்லாம் நம் தலைவர் அவர்கள் செய்து கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் என்பதைச் சொல்லுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியம், சங்கிக் கூட்டத்தைத் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடக்கூடாது. அடிமைக் கூட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள், குறிப்பாக சென்னையில் தலையெடுக்க விடக்கூடாது.

### தி.மு.க.வின் கோட்டை!

இந்தத் திருவொற்றியூர் என்றென்றைக்கும் தி.மு.க-வின் கோட்டை. இந்தச் சென்னை மாநகரமே தி.மு.க-வின் கோட்டை என்பதை இந்தத் தேர்தலில் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும் என்றால், அடுத்த இரண்டு நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்து நீங்கள் பேசுங்கள். அப்படிச் செய்தீர்கள் என்றால், நிச்சயம் மிகப்பெரிய வெற்றியைப் பெறலாம். சென்ற முறை நம் கே.பி.சங்கர் அவர்கள் கிட்டத்தட்ட 40,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இந்த முறை அண்ணன் தோழர் சுந்தர்ராஜ் அவர்களைக் குறைந்தபட்சம் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிபெற வைத்து காட்ட வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து, தோழர் சுந்தர்ராஜ் அவர்களுக்கு அரிவாள் சுத்தியல் நட்சத்திர சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து அவரைச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.

இந்தத் தொகுதிக்கு என்னென்ன தேவையோ, நம் முதலமைச்சரிடம் சொல்லிப் போராடி, நிச்சயம் அந்த உரிமையை பெற்றுக்கொடுத்து உங்கள் தொகுதிக்கு என்னென்ன திட்டங்கள் தேவையோ, அத்தனை திட்டங்களையும் கொண்டு வருவார்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி நன்றி நன்றி.

### கலந்துகொண்டவர்கள்

மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் சுதர்சனம், சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், பகுதி செயலாளர்கள் தனியரசு, ஆறுமுகம், அருள்தாசன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி கணேசன், ஆனந்தன், கழகப் பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மதன்குமார், துணை அமைப்பாளர்கள் மணிவண்ணன், கேபிள் கணேசன், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட இளைஞர்கள், பெண்கள் உள்பட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

---

## திருவண்ணாமலை மாநகரத்தைச் சேர்ந்த

# அ.ம.மு.க.வினர் 25 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில்!

*திருவண்ணாமலை, ஏப். 22-*

திருவண்ணாமலை மாநகரத்தைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட அ.ம.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

19.04.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை மாநகரம், அமமுகவைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவண்ணாமலை மாநகரம், அம்மா மக்கள் முன்னேற்றக் கழக தகவல்தொழில் நுட்ப அணி மாவட்டச் செயலாளர் ஏ.சிலம்பரசன் தலைமையில், டி.பரணி, எஸ்.தினேஷ், எஸ்.நந்தக்குமார், கே.அபிஷேக், எம்.கார்த்தி, ஏ.முகமத், எம்.அனிப், ஏ.தமிழரசன், எம்.அசோக்குமார், கே.நித்யா, ஆர்.முகமதுஈசா, ஏ.அரவிந்தன் உட்பட 25க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

கழகத்தில் இணையும் நிகழ்ச்சியினை வட்ட செயலாளர் எஸ்.கே.டி. வீரா செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநில அமைப்புசாரா தொமுச ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் இரா.கார்த்திகேயன், பாலமுரளிகிருஷ்ணா, வட்ட செயலாளர் எஸ்.கே.டி.வீரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

# தமிழ்நாடு இளம் உலமா முன்னேற்றப் பேரவை ஆதரவு!

*சென்னை, ஏப். 22-*

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, தமிழ்நாடு இளம் உலமா முன்னேற்றப் பேரவை ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு இளம் உலமா முன்னேற்றப் பேரவையின் பொதுச் செயலாளர் மௌலவி பி.அப்துல் பாஸித் அலி சதாகி, அமைப்புச் செயலாளர் மௌலவி டாக்டர் நூ. அப்துல் ஹாதி பாகவி ஆகியோர் 21.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற பாடுபடுவார்கள் என உறுதி அளித்தனர்.